1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காளிங்கராயன் வாய்க்காலை சீரமைப்பு செய்ய வேண்டுமென்று கலைஞர் தலைமையில் அமைந்த கழக அரசு 1974 ஆம் ஆண்டு ஒரு திட்டம் தீட்டி அந்தப் பணிக்காக ரூ. 60 இலட்சத்தையும் ஒதுக்கீடு செய்தது. இத்தொகையில் பெரும் பகுதி செலவு செய்து பல பணிகளை நிறைவேற்றியிருக்கிறது. என்றாலும் இத்திட்டத்தின் முக்கிய பணியான மதகுகளைச் சீர மைக்கும் பணி இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. காரணம் இப்பணியைத் தொடங்கும்போது விவசாயிகளிடையே மதகுகளைச் சீரமைப்பதற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பணி அப்படியே நிறைவேற்றப்படாமல் நிற்கிறது.

தாமல் கிராமத்து ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்க்கு சிமெண்ட் பூசுதல்.

* 2117. திரு. பொ. முருகேசன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காஞ்சீபுரம் நகராட்சியின் குடிநீர் பற்றாக்குறையை போக்கும் வகையில் அப்பகுதியில் உள்ள தாமல் கிராமத்து ஏரியை ஆழப் படுத்தவும், அதன் வரத்துக் கால்வாய்க்கு சிமெண்ட் பூசவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

தாமல் ஏரியில் பாசனத்திற்குத்தான் போதிய அளவு நீர் இருக்கிறது. அதிலிருந்து தண்ணீரைக் குடிநீருக்கு எடுப்பதற்குப் போதிய அளவிற்கு நீர் இல்லாத காரணத்தால் காஞ்சிபுரம் நக ராட்சிக்கு குடிநீர் பற்றாக்குறையைப் போக்க தாமல் ஏரியிலிருந்து நீர் எடுக்க இயலவில்லை.

திரு. பொ. முருகேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்வி தாமல் ஏரியிலிருந்து குடிநீருக்காகத் தண்ணீர் எடுக்க வேண்டும் என்பதல்ல. தாமல் ஏரி என்பது காஞ்சிபுரம் தொகுதியிலே மிகப் பெரிய ஏரியாகும். அந்த ஏரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிரம்பி வழிந்தால்தான் காஞ்சிபுரம் பகுதிகளிலே வேகவதி ஆற்றிலே தண்ணீர் வருகின்ற வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த ஏரி நிரம்பி வழிய வேண்டும் என்பதற்காக அந்த ஏரிக்கு வருகின்ற கால்வாயைச் செப்பனிட்டு சிமெண்ட் கால்வாயாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்த ஏரியை ஆழப்படுத்தித்தர வேண்டும் என்கிற கேள்வியைத்தான் நான் கேட்டிருந்தேன். அந்த ஏரியை ஆழப்படுத்தினால் அதிலே வருகின்ற தண்ணீர் வேகவதி ஆற்றிலே விடப்பட்டு அந்த வேகவதி ஆற்றங்கரையிலே காஞ்சிபுரம் நகராட்சிக்குக் குடிதண்ணீருக்காக பம்ப் ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் அந்த ஏரியை நான் முக்கியமாக எடுத்துக்கொண்டு, அந்த ஏரிக் கால்வாயைச் செப்பனிட்டு தரவேண்டும் என்று கேட்டேன். இது தான் என்னுடைய கேள்வி. எனவே அந்தக் கால்வாயை செப்பனிட்டு . . . .

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தாமல் ஏரிக்குப் பாலாற்று அணைக்கட்டிலிருந்து வருகின்ற காவிரிப் பாக்கம் கால்வாயிலிருந்து கோவிந்தாபுரம் கால்வாய் பிரிகிறது. கோவிந்தாபுரம் கால்வாயிலிருந்துதான் தாமல் கால்வாய் 10 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பிரிந்து வந்து தாமல் ஏரியிலே கலக்கிறது. அந்த 10 கிலோ மீட்டர் தூரத்தைச் செப்பனிட வேண்டும் என்று பல இடங்களில் அது சேதாரம் அடைந்திருப்பதை எண்ணி அரசு அதைச் சீரமைக்க அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் குறித்து ஒரு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கரையைப் பலப்படுத்த தொடங்கப் பெற்ற வேலை 30—9—1989-ல் முடிக்கப்பட்டு விட்டது.

(10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

வெள்ளைக்கல் அணைத் திட்டம்.

*** 3552. திரு. பா. அப்துல்சமத் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வாணியம்பாடி தாலுகா ; வெள்ளைக்குட்டை அருகில், வெள்ளைக்கல் அணைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?